# ஆதி மார்க்க னீதி மொழி

**February 2025**

***இதழ் 43 – பிப்ரவரி மாதம் 2025 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே !

மெய்ம்மணம் கமழ மலரும் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை, 12 அவை, 3 இசை வகுப்பு நிகழ்வுடன் 43ஆவது இதழாக மார்கழி மற்றும் தை மாத சிறப்புடன் உங்கள் முன் மலர்ந்துள்ளது. மார்கழி மாத நிறைவும், தை மாத உதயமும், உத்ராயணம் தட்சிணாயணம் என்ற கால ரகசியத்தின் சிறப்பாகவும், 12 ராசிகளின் சிறப்பும் 12 மாதங்களாகவும், இவை யாவும் காலம் மற்றும் ஒவ்வொரு கோவிலின் சிறப்பாகவும் உள்ளது. இந்த ரகசியம் யாவும் அறியும் ஆற்றல் உள்ளவன் மனிதன் ஒருவனே.

ஐயறிவு ஜீவபேதங்கள் அறிய இயலாத நாள், மாதம், வருடம் என்ற காலத்தின் ரகசியம், உணரும் ஆறாம் அறிவைப் பெற்றவன் மனு மாத்திரமே. மனுவின் உணர்ச்சி, உணர்வாகி மெய் உணர்வாக மாறுகின்ற தேவ ரகசியப் பொக்கிஷமே சாலை ஆண்டவர்கள் அருளிய செயல். இவை யாவும் பொதிந்த முக விலாசமுடன் தேடாமல் கிட்டும் தெள்ளமுதாக வேத சாட்சியுடன் உதித்து வரும் இச்சஞ்சிகை பேச்செலாம் கடந்த மூச்சுக்கு அப்பால் இருக்கும் பேச்சாக உள்ளது. இதன் சாட்சியாக ஆண்டவர்களும் பேச்செலாம் னிஜமங்நாச்சுப் பிரண்டிடா னிலையுமாச்சு மூச்சதுன் வசமேயாச்சு மும்மலக் குறும்பும் போச்சே என அருளியுள்ளார்கள்.

மனம் பிறழாமல் நிற்பதே, நின்றதொரு பிரளயம், அஃதன்றி உலக அழிவல்ல. பிரளய நீதி தெளிவுறுங் கோல் கை கொண்டு இங்கு சொல்லப் பெற்ற பரிபாஷை சொற்களை மானிடன் ஆனவனே அறிவான். மூச்சின் தலைவனான மனம் பிறழாது இருந்தால் மும்மல குறும்பும் போகும் என அருளும் இச்சஞ்சிகை பிறவிப் பிணி தீர்க்கும் ஒரு சஞ்சீவி என அறிவறிந்த மக்களே அறிவர். ஆதி மார்க்க னீதி அவையின் ஒரே நோக்கம், நிஜம் தேடும் மக்களுக்கு நிஜ நிதி லாபகர வசந்தம் வழங்குவது ஒன்றே. ஆண்மையர் அனைவரும் வாங்க வாங்கோ. அகர முதல் வாங்க வாங்கோ! அவ்வுமுதலும் வாங்க வாங்கோ என்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணையான இந்த திருவார்த்தை நிஜமாகின்ற எல்லை இது ஒன்றே ஒன்றுதான் என உலக மக்கள் யாவர்க்கும் அறுதியிட்டுக் கூறுகின்றோம்.

தனுவின் நாணியில் இருந்து வெளியாக்கப் பெற்ற இந்த தேவ ரகசியங்கள் யாவற்றையும் போதுமானவரை அணிந்து கொள்ளுங்கள் என்ற சாலை



Copyright © AMNA Trust, Chennai 

**ஆண்டவர்களின் ஆசீர்பாத ஒலிவாயுரை, இங்கு நம்மிடமும் வந்து வாய்த்ததை இவ்வில்லின் மூலமாக நாம் வழங்கும் செயலை மக்கள் யாவரும் பார்த்து படித்து வேத சாட்சியாகப் பெற்றுக் கொள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*மனிதன், தன் தலையின் தரத்தை எண்ணிப் பார்க்காமல் அசலை ஞாபகமூட்ட எடுத்து வைத்த கல்லையும் செம்பையும் வெளி ஆகாயத்தையும் தெய்வமாகக் கும்பிடுகிறான். அதனால் தனக்கு மதிப்பு என்று அதில் ஈடுபடுகிறான். இவனுடைய ஒரு ரோமக் காலினிடத்திலுள்ள மதிப்பு அதற்கு உண்டா? னித்தியத்தைப் புறக்கணித்த பாவம், இவனை அப்படிக் கொண்டு போய் முட்டடிகிறது. இவன் கட்டுகிற கட்டிடம் இவன் பார்க்கும் உத்தியோகம், பிறருக்கு அறிவுவர இவன் பேசுகிற பேச்சு, புண்ணியம் னன்மை என்று இவன் செய்கிற செயலனைத்தும் விளையாட்டுத்தனமாகவும் ஒரு கேலிக்கூத்தாகவுமே இருக்கின்றன. ஒருத்தனைப்பார்த்து இன்னொருத்தன் இப்படியே கெட்டு னாசமாகிறான். முன்னவன் கதி என்னவாச்சு என்று னினைக்க வேண்டாமா? ஊனுக்கு உதவி தேடி உலுத்துச் செத்தாரல்லால், தனக்கு எள்ளளவும் உதவி உண்டோ? இல்லை.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 ஜனவரி மாதம் அவை நிகழ்வுகள் – 2025 பிப்ரவரி மாதம் வெளியீடு

## 02-01-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி **போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
தோற்றத்தில் இல்லாத நரன் குருவின் அருளால் ஆறாம் அறிவை அறிந்து மனுவாகத் தோன்றுவதே புகழொடு தோன்றுவது. தேவனின் ராஜ்யத்தை அடைய ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்கிறது சத்திய வேதம். ஒரு புள்ளியிலிருந்து உண்டான இத்தேகம் மீண்டும் அதில் சென்று அடங்குவதே அடக்கம் என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. இல்மு எனும் சாகா கல்வி ஓதும் முறையை அறிவிக்க வந்ததே மறைகள். மதிச்சுமை தாங்கி வரும் ஞானிகள் அதனை உற்ற ஒருவரிடம் சேர்த்த பின்பே தங்கள் அனித்திய தூலம் விட்டு நித்திய தூலத்தில் குடியேறி அறிவு வடிவாக எங்கும் திகழ்கிறார்கள்.

**திருமெய்ஞானக் கொரல் வாக்கியம் எண் 5 ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
ஜனித்த ஒரு குழந்தை உண்டாக்கும் சப்தமும் மூச்சுமே ஜீவன் குடியேறியதின் அடையாளம். குழவி முதல் தெரிவை வரை ஆறு வகை பிறப்பிலும் நம்மை வளர்ப்பது அகமியத்தில் இருக்கும் சக்தி வடிவான தாயே.

**குருபிரான் அருளமுதம்:**
அவரவரும் தன்னை அறிவதற்கு வேதமே சாட்சி. தூங்காமல் தூங்கி சுகம் பெறும் த்விஜன் என்ற நிலையில் உள்ளவர்களே குருவும் தெய்வமும் ஒன்றென அறிவர். பயிலும் சாலை கைவந்து பலிக்கும் நல்ல நாளே கயிலை நாதன் கதி சிவன் ராவென சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். எமனையே குருவாகக் கொண்டு எமபயம் கடந்த நசிகேதனின் வரலாறு கூறும் கடோபநிஷத் உணர்த்துவது சாஸ்திர அறிவு பெற்று வாழவே.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**
பண்டுளபால் எனும் அழியாத மெய்ப்பாலே பால் போன்ற மெய்வழி நூல். முப்பாழ் கடந்து முப்பால் அறிய ஞானப்பால் அருந்தியவரே ஞானசம்பந்தர். ஆசான் அருளால் மதியை அறிந்தே விதி வினை காலம் இவற்றை மாற்ற முடியும். திருமூலர் வழிபற்றி மெய்ப் பொருள் உணர்த்தி அத்வைத நிலை அறியும் அறிவை நம்மிடத்தில் அருளும் ஆசானே அறிவின் வடிவம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*துவிதபாவத்திற்கு அப்பால் ஆனவரும், சுய அனுபவப் பிரகாசம் கைவரவானவரும், தன்னை அண்டியவர்களின் அஞ்ஞான மென்னும் மாரண இருளைப் போக்குகின்றவருமாய் விளங்கும் சர்வக்ஞரே பரமகுரு.*

***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai 

## 04-01-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி பணிந்து **ஜீவ கங்காவின் வான் பொதிகைத் தென்றல்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பிறவிப்பிணி மாற்றும் வல்லபமுடன் வரும் பெரியோர்கள் வாழும் காலமே பூவண வசந்த காலம். அக்காலத்தில் அவர்களுடன் கூடிக் கொள்ளும் மக்களே ஜீவகங்கையிலிருந்து பொங்கி வரும் அமுதத்தைப் பருகி, அதிர்ஷ்டத் தலைகளாக அழியாப் பதியில் குடியேறி வாழ்கிறார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 197 :** ஆசான் உத்திரவுக்கு கட்டுப்பட்டு நடப்பது ஒன்றே, மனம் எனும் சத்துருவை வென்று, மெய்ஞ்ஞானம் அடைவதற்கான உபாயமாகும். பெரியோர்களின் உத்தரவுக்கு எதிராக செயல்படுபவர்களே அன்னியர்கள், விரோதிகள் என வேதம் கூறுகிறது.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* அருட்பெருஞ்ஜோதி அகவல் - அகரம். **அரி அகர முதலாய அவ்வுந் நேறி** என்ற சாலை ஆண்டவர்கள் திருவாக்கின்படி, சர்வ நாமங்களுக்கும் இருப்பிடமாகவும், மனித பிறப்பின் மூல ஒலியாகவும், அ + உ + ம் = ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் முதற்பொருளாகவும் இலங்கும் அகரத்தை அறிந்தோர்களே ஆதி பரமகுரு.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**
**பிஸ்மில்லா ஹிர் ரஹூமான் னிர்ரஹீம்** எனும் பரிபூரணமே புதையலாக அருளப்பெற்றுள்ளது. மூலப்பழம் பண் ஆரமணி உண்டை பெட்டகமாக உருவெடுத்து வரும் ஆசான் திருவடியில் அலைவற்ற மனதுடன் அருளமுது உண்பவர்களே சாகும் திறமாகிய சாஸ்திரத்தை அறிகிறார்கள். செத்திடம், பிறந்திடம், இனிச் சாகாதிருக்கும் இடத்தை இலக்காகக் கொண்டு தன் எனும் ஜீவகுகையில் குடியேறி தன்னிலக்கணம் விளங்கிய தவசீலர்களாகவும் திகழ்கிறார்கள் என்ற திருமொழிகளுடன் அவை இனிதே நிறைவானது.

## 05-01-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* இறைவனின் இரகசியப் பெட்டகமாக இருந்தும், தன் கடமை அறியாது உழலும் மனுவை அறிவின் நிலைகாட்டி அவன் கடமையை வேத சாட்சியாக உணர்த்துபவரே கங்காளனாகிய குருபிரான். அவர்கள் பூசும் கவசத் திருநீரே நம்மைக் காக்கும் மந்திர, தந்திர, சுந்தரமான கவசமாகும். அழிவையே நாடும் மனுவுக்கு அழியாப் பொருளை அருள்பவரே குருபிரான். ஈசனாக வரும் ஆசானே நம் இரு வினை தீர்க்கும் இறுதித் தீர்ப்பர். அவரே எழுதாத எழுத்தான மோனஎழுத்தை நாம் ஓதாமல் ஓதச்செய்யும் அறிவாகரர். எழுவகைத் தோற்றமான வித்யா தத்துவமே அவரவரின் அறம் செய்யும் சொந்த இல்லம். கற்பகத் தருவாக, பரிசீலனைக்கு எட்டாத வித்தில்லா வித்தாக வரும் தூலாதி சூட்ச வித்தினை அறியும் அறிவு மனு ஒருவனுக்கே உண்டு.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* மெய்யானது கைவரவாக வந்த வேதமாகிய ஆசானின் பேரிரக்கம் வேண்டும். அதுவே நம் இதய லோகத்தில் குடியிருக்கும் கோடி சூர்ய சுயம்பிரகாசப் பொருளை தரிசிக்கச் செய்யும். அறியாமையில் சிக்கித் தவிக்கும் அடிமையை மீட்டு அறிவுப் பிரகாசத்தில் ஏற்றி வைக்கும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 09-01-2025 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது குலமுழுதும் தனையாண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
பரமபத வாழ்வுக்குரிய இறைவனின் இருப்பிடமே ஞான ஆகாயப் பெருவெளி. காற்றைப் பிடிக்கும் கணக்கறியச் செய்யும் காலாதீதனாம் குருவின் அருளால் காலச் சக்கரமாக இயங்கும் சத்தும் சித்தும் அறிந்த மனுவே அசைவற்ற பரம்பொருளுடன் ஐக்கியமாகி ஆனந்தம் பெறுகிறான்.

*ஜீவசகோதரர் சங்கர்:*
வாழ்வின் ஆதாரமாகிய ஜீவனை தன்னுள் கண்டு தரிசித்தலே ஞானம். சுக்குலத்தில் உண்டான ஒரே குலமே நாம் என உணர்த்தி அருளும் குருவே நம் தலை காக்கும் தர்மம் செய்யும் தர்மராஜன்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் எண் 05-ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
குருவின் திருப்பார்வையே நம் பாவ தோஷங்களை நிவர்த்தி செய்யும். வாயின்றிப் பேசி, கண்ணின்றி கண்டு, காதின்றி கேட்கும் சூட்சும சரீரமாகிய மனதை அறிந்து அதனை அறிவாக மாற்றுவதே தவப்பலன்.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**
புருஷார்த்தம் நான்கும் கைக் கொண்டவரே பரிபூரணர். அவர்களே ஜீவனின் ரகசியமான தமிழ் மொழியுடன் இரண்டறக் கலந்தவர்கள். ஆசான் அருளும் பூராடத்தின் செயல் கொண்டு தன்னில் ஏகாட்சரத்தை அறிந்து பூரணத்துவம் அடைந்தவனே பூரணன். பத்தாம் வாசலாகிய பரமபத வாசலில் நாள் தோறும் நுழைந்து பழகும் வைகுண்ட ஏகாதசியின் ரகசியம் அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என குருபிரான் அருளியதும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 11-01-2025 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **தேகம் னம் போலுள்ள எம் குருனாதருக்கு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
நம் போல் தேகம் தாங்கி வரும் மெய்க்குருபிரான் அருளும் உளவின்படி காலனைக் காலால் மிதிக்கும் கருத்தறிந்து, சாமுன் சாகப் பழகும் செயலே, மரணமிலாப் பெருவாழ்வு. கைலாச வாசனின் திருச்சன்னதியில் ஸ்ரீமன் நாராயணனின் நிழல் போய்ச் சேரும் நகல் சடங்கே, நாம் ஏகாதசி விரதம் இருந்து பரமபத வாசலுள் நுழைந்து பெருமாளைச் சேவிக்கும் செயல்.

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் 198 - குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் ஜகத்து மனுமக்களுக்கு ஜீவப்பரிசாக அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தில் அணுவில் ஒன்றை கைக்கொண்டு சமத்துவத்தை உணர்ந்து சாதிக்கும் பிள்ளைகளே உயர்ந்த ஜாதி. அவரவருள் அறிவாக விளங்கும் நீதி எனும் பொருளுக்குள் ஆகிக் கொண்ட மனுவே அதனை ஓதி உணர்ந்து ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறுகையில் தேவர்கள் என்பது, மறைமொழி மாந்தரின் னிறை மொழி சான்றாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: 1:11-19:** ஆறாம் அறிவை வரமாகப் பெற்று வந்த மனுவின் கடமை தன் ஜீவனை அறிவதே. இதன் ரகசியத்தை ஏழு நட்சத்திரங்கள், ஏழு ஆவிகள், ஏழு பொன் குத்துவிளக்காக ஏழு சபைகளுக்கும் அறிவிப்பதே பரிசுத்த ஆவியின் திருவுளமாகும். அறிவு வடிவான குருவாகிய மனுஷ குமாரன், தன் வாளாயுதம் எனும் முக்கூர் கத்தி கொண்டு நம் அறியாமை அகற்றி அறிவாக மாற்றுகிறார்கள். நம் மனம் திரும்பும் அறச்செயல் அருளி நித்திய ஜீவனும் சமாதானமுமான ஆவிக்குரிய சிந்தனை மூலம் பரலோக ராஜ்ஜியத்தில் நம்மைப் புகுத்தாட்டி வைக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

குருவின் திரு முகத்தில் மறுபிறப்பு பெற்றவர்களே தேவனின் பிள்ளைகள். மோசே தனது ஆசரிப்புக் கூடத்தில் ஏற்றிய ஏழு தீபம் கொண்ட விளக்கின் தாத்பரியமே அமானிதத்தின் ரகசியம். இதனை மனிதனின் ஐம்புல நுகர்வையும் பிரகாசிக்கச் செய்யும் ஜீவனே, னூர் ஒளி என இஸ்லாம் கூறுகிறது. இதை உணர்ந்து அறியும் அறிவைப் பெற்றவனே மனு.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**

சிரம்பெரும் துறையின் சீர்பாதக் கமலமான பூரணத்தின் இருப்பிடமே பரிபூரணம். சாலை ஆண்டவர்கள் பட்ட பாடும் விட்ட கண்ணீரும் நமது திருட்டு ஈன கர்வம் ஒழிவதற்கே. தேனமுதுடன் பூங்காரம் சேர்த்து அவர்கள் அருளும் னாத மருந்தை நாம் உட்கொள்ளும் நாளே திருநாள். எழுதாத எழுத்தான இரண்டெனும் வாசி கூடும் அமாவாசி எனும் மக்காமில் மனம் பிசகாது தெளிந்து வாசி வசமாகும் தேவ ரகசியச் செயலே பிரம்மவித்தை. சாலை ஆண்டவர்களின் உற்ற சீடராம் மெய்வழி கலைமகா அனந்தர் எழுதிய பிள்ளையார் சுழி என்ற நூல் மெய்ஞானம் பெற விழையும் மக்களுக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாகும். அசலை உணர்த்த ஆகம விதிப்படி நாம் உண்டாக்கியதே ஸ்ரீ ஆதி சக்தி வாலைத்தாய் அம்மன் ஆலயம். எதார்த்த உள்ளமுடன் தேடி வரும் நன்மக்களை அழிவில்லா வாழ்வில் ஆக்கி ஆன்ம லாபம் பெறச் செய்யும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி அவை நிறைவானது.

## 14-01-2025 ~ பொங்கல் சிறப்பு அவை (காலை) ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் பணிந்து ஸ்தோத்திரப் பாடலுடன் குருபிரான் திரு முன்பாக சாலை ஆண்டவர்கள் அருளிய பானை பலி பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

செல்வமுச்சீரும் பொங்க சேர்ந்த பேர் ஜென்ம சாபல்யம் ஓங்க கங்குல் பகலற்ற செங்கமலத்திருவாக இருக்கும் ஜீவனை அடைந்து வாழும் வழி அருள்வதே கோளரி சாலையர் பொங்கல் திருவிழா. இடருறும் இறுதி நாளில் நம்மைப் புகழுடம்பில் தேற்றி, ஏற்றி, மாற்றிப் பிறக்க வைத்து முகத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்வதே பொங்கல். இதனை வாழும் வரமாக வழங்கிய பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்குவோமாக.





Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் வடிவேலன்:* பெரியோர்கள் உண்டாக்கிய சடங்கு சம்பிரதாயம் திருவிழா யாவும் நம் அகமிய ரகசியம் அறிந்து வாழ்வதற்கே. அழிகரு வழி வந்த நாம் மீண்டும் ஒரு கருவில் ஜனிக்காமல் பிறவிப் பிணி தீர்ந்து, கருவறையில் காட்சி தரும் கடவுளுடன் கலந்திட கட்டாயம் தேவை ஒரு மெய்குருவின் தயவே. ஆறாம் அறிவை அறியச் செய்து நவக்கிரக காலச் சக்கரத்தின் பிடியில் சிக்காமல் நம்மை காக்கும் மெய் ஞானியே சக்கரத்தாழ்வார். அன்னவர் அருளும் சக்கர நெறியில் நிற்பதே நம்மை இறை திருவடியில் சேர்க்கும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* கருணை வடிவாக வரும் காமீல்களின் அருளால் கணந்தோறும் நம்மைக் காத்து ரட்சிக்கும் கடவுளாம் ஜீவனைக் கண்டு தரிசித்து மகிழ்ச்சி பொங்கும் நாளெலாம் பொங்கல் திருநாளே.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-01-2025 ~ பொங்கல் சிறப்பு அவை (மாலை) ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மெய்வழி கலைமகா அனந்தர் எழுதிய **உ** பிள்ளையார் சுழி என்ற நூல் மெய்ஞ்ஞானத் தேட்டம் உள்ள மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். நித்ய ஆனந்தம் தரும் சுயம்பிரகாச வெளிச்சப்பொருளே பாதம், நாதம், அறிவு, இறைவன் என்பதாகும். அறுசுவை கொண்டொளித்த அவ் இடமே துக்கவுடலுள் இருக்கும் சுக உடலின் இருப்பிடம். குருவருளே ஞானமும் அறிவும் பெறுவதற்கான வழி. அவரவரின் இருதயப் பிரகாசப் பொருளைக் காட்ட வருபவரே இருந்தவர், இருப்பவர் வருபவர் என்பதாம்.



மனித உடலின் தலைவன் காற்றே. அதற்கு பிராணனும், அதற்கு வினைத் தலைவனான மனமும், அதன் படைப்பும், இவற்றின் தலைவனாக சிவனும் உள்ளனர். மூக்கில் ஓடும் மூச்சை உள்ளிருந்து அறிவிப்பதே உயிர். அறியாமையில் இருக்கும் அறிவை அறிந்து அசைவற்ற பரம்பொருளுடன் சேர்ந்து சைவமாகி இருப்பதே அமானிதம். தன்னை அறிந்து சிவமான ஜாதியின் இருப்பிடம் அறிந்தோரே ஆதி மார்க்க னீதி அவை அங்கங்கள்.

நம்மிடம் கணந்தோறும் நடக்கும் மரணமே நமது பாவத்தின் சம்பளம். எங்கு தட்டவும் எதைக் கேட்கவும், எதைத் தேடவும் வேண்டுமென ஐந்து ஆகமங்களாக கூறும் சத்திய வேதமே ஜெபம் என்ற பெயரால் அற்ப வார்த்தை கொண்டு அலம்பாதே என்கிறது. இவ்வுலகம் மறந்துவிட்ட இறைவனை அடையும் வழியான பிரம்மவித்தையை கற்றுத் தரும் செயலே ஆதி மார்க்க னீதி அவையின் அடி நாதம். சர்வ சம்பத்தும் இருந்தாலும் வினை முடிந்தால் இறப்பு நிகழ்கிறது. இறை திருவடியில் ஆன்மா சேரும் நாளே 40ஆம் நாள் ஆன்ம சஞ்சார உரிமைக்காட்சி. செத்திடமும் பிறந்திடமும் இனி சாகாதிருக்கும் இடமும் அறியும் அறிவே அறிவாகும். ஆறாவது அறிவெனும் பிரம்மன், மனமாக அமர்ந்துள்ள இடமே நாத உடம்பாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 16-01-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறைந்தும் ஒருவருக்காய் அருளிய...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆறைந்தும், ஐந்தும் மூன்றும், எட்டிரண்டும் என வாயில் சொல்லும் சர்வ மதங்களின் மந்திரமும் செயலாகும் பிரம்மவித்தையே சாகாக்கல்வி. சிரசிலுள்ள சிற்றம்பலப் பொருளே இறை இல்லமான மந்திர். கூர் எனும் கோடியாகிய அமானிதத்தை அவரவரும் தன்னுள் அறிந்து தேவனாகும் செயலே பிரம்மவித்தை. வாழும் காலத்திலேயே ஜீவனுக்கு உரிய காப்பீடு செய்து அதற்குரிய சன்மானமும் பெறும் ஒப்பற்ற ஓர் இடமே ஆதி மார்க்க நீதி அவை.

**திருமெய்ஞானக் கொரல் வாக்கியம் எண் : 6 - குருபிரான் அருளமுதம்:**
தமிழ்க்கடவுள் முருகப் பெருமான் தன் சீடராம் குருமுனிக்கு அருளிய ஜீவ தேக ரகசியமே தமிழ் மொழி. சாலை ஆண்டவர்கள் அருளிய கோடியில் ஒன்றைக் கைப்பற்றி நம் ஜீவக் குகையில் வீற்றிருக்கும் மறுவிலாக் குகனை கண்டு தரிசிக்கும் செயலே நம் பிறவி மயக்கம் தீர்க்கும். ஆலயங்கள் உணர்த்தும் அகமிய ரகசியத்தை பிறவி நீக்கும் நித்தியரின் அருளால் அறிந்து காலமற்ற இடத்தில் நித்தம் குடியேறி வாழ்வதே மனிதனின் முதல் கடமையாகும்.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் அருளிய வேத வேதாந்தங்கள் யாவும் உருக்கமுடன் ஊசி முனை வாசல் பாய்ந்து ஓ முடிந்த பட்டணத்து ஊடுருகிச் சென்று ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறுவதற்கே. **கால்பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை** என வள்ளலார் கூறிய கோடி சூரிய பிரகாசத்தை சாலை ஆண்டவர்கள் தேசு நிறம் கமழும் தெய்வப் பதி என்கிறார்கள். நா மகளின் வாடா மலராகிய வாக்கான தீயில் வாடாது நின்றால் வாக்மி ஆகலாம் என்கிறது வேதம். மகரந்த சேர்க்கையால் மலரும் உலகம் போல், மகரந்தரின் சேர்க்கையால் மதியானது மலர்ந்து அறியவற்றுள் அரிதாம் அறிவை அறிய வைக்கிறது. அறிவு வடிவாம் ஆசான் அருளும் பிறவா நெறி பெறும் திருத்தலமாம் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் யாவரும் அதிர்ஷ்டத் தலைகளே.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 18-01-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓங்குவ ருயிர்க்கு நாளும் உறுதுணை வருமா னிற்பர்...** என்ற மெய்வழிச் சாலை ஸ்தாபிதம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனிதனை ஆள்கின்ற நாளும் கோளும் விதி எழுத்தாகி மரணத்தை நோக்கி இழுத்துச் செல்கிறது. நவக்கிரக கோள் மாற்றும் நாத ஜோதிடராகிய குருபெருமானிடத்தில் சரணடைந்து உயிருக்கான யோக உணவை உட்கொள்வதன் மூலமே புலன் வழி பற்றி ஓடும் வயது வாழ்நாள் விதி வசத்திலிருந்து மீட்கப் பெற்று மதி எழுத்தாக மாற்றப்பெறுகிறது.

**கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்: 199**
அறிவுருவாம் ஆசானின் வாய்மையை வைராக்கியமுடன் பற்றி மெய்க் கல்வியை பழகித் தேர்ந்த சீடர்கள் எந்த சூழ்நிலையிலும் சத்தியத்தின் பிடியிலேயே நிற்பார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

ஆசானிடம் அணுவளவும் குற்றம் காணாது களங்கமின்றி மாறாப்பற்றுடைய மாணாக்கராகத் திகழ்ந்து மெய்க்கான உற்ற கருவிகளாக வாழ்கிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் : வெளிப்படுத்தின சுவிசேஷம் - திருவசனம் 1:20** ஏழு நட்சத்திரங்கள், ஏழு குத்து விளக்குகள் என்பவை அமானிதத்தின் எழு வகைப்பட்ட பொருள்களின் இரகசியக் குறியீடாகும். பரலோக மன்னாவாகிய மெய்குருபிரானின் பரிசுத்த ஆவியாகிய சப்தத்தை கேட்கும் செவி உடையவர்களே மனுவின் தலையாய கடமையாகிய தன்னையறிதல் என்னும் பூரணத்துவம் பெற்ற திருச்சபைகளுக்கான தூதராகிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தேவனாவதற்கு உரிய வித்து நரனே என்கிறது வேதம். எழு வகைத் தோற்றத்தில் இல்லாத நரன், நித்தியரான குருவின் திருவுளத்தில் சீடன் எனும் தகுதி பெற்ற பிறகே மனுவாகிறான். உடல் பொருள் ஆவி ஆசானிடத்தில் தத்தம் செய்யும் மனுவே பிறவா நெறி பெறுகிறான். இவ்வரும்பெரும் செயல் யாவும் குருமுகமாக சிவானுபவமாக அறியவேண்டிய பெருநிலை வைப்புகளாகும் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 19-01-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **தேகம்னம்போ துள்ளஎம்குரு னாதருக்கு னாமமெதும் செப்புதற்கொப் பனையுளதோ...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஞான சூரியனாக வரும் குருவின் அருள் ஒளியால் மனுவின் உலகம் விடிந்து நீக்கரிய பிறவி இருள் மாய்கிறது. ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய ஜாதி மனுக் குலத்தில் நம்மை ஆக்கி வைக்கும் திருத்தலமே ஆதி மார்க்க னீதி அவை. ஜீவ கங்காவின் வான் பொதிகைத் தென்றலாக வரும் குருவின் ஓசை கொண்ட நடனமே நாம் பெறும் எமனணுகா சாகா வரமாகிய ஈடு இணையற்ற பரிசு.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆலவாய் திறந்து ஆலங்காட்டும் குருபிரான் காலக்கிரகங்களின் பிடியிலிருந்து நம்மை மீட்கிறார்கள். **புனைந்த பாவமெல்லாம் பரிபூரணம் உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே...** என்ற தத்துவராய சுவாமிகளின் திருவாக்கின் படி குருபிரானின் திருப்பார்வையே நம் வினை தீர்த்து விதியை மதியாக மாற்றுகிறது. தங்கம் போன்ற குணம் கொண்ட மெய்ஞானிகள், நாம் தங்க அருளும் இடமே தேகத்தில் நாம் தங்கி வாழும் இடம். திருப்பாற்கடலில் இருந்து பெரியோர்கள் எடுத்து அருளும் அமுதமே வேதாந்தம். அதுவே எழுதாத எழுத்தாக மோன எழுத்தாக வித்தில்லா வித்தாக விளைந்து வரும் பரிசுத்த ஆவி. இதில் மறுபிறப்பு பெற்றவர்களே பிறவிப் பெருங்கடலை கடந்து பிறவாமை பெறுகிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*எவரைப் பார்த்த மாத்திரத்தில் மனத்திற்குத் தானாகவே சாந்நியும், திடமும், மகிழ்ச்சியும் உண்டாகின்றதோ அவரே பரம குரு.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 23-01-2025 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, **அந்நமே சிந்நை பதிந்ந சந்நன கந்நங்ஙமமும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* நமது சிந்தையில் இருந்து சந்தன மணம் கமழ துப்புரவாக அகம் துலக்கும் ஆசானே தன் செந்தூரப் பொடியால் எந்திரமாய் இருந்த நம்மை நம் சொந்த தேகமாகிய மந்திரத்தில் குடியேற்றுகிறார். அவரே நம் மனதின் பந்தம் விலக்கி அறிவின் வசமாக்கி அந்தர் மாமுகம் கண்டு ஓங்கும் அனந்தர்களாக ஆக்குகிறார்.

**திருமெய்ஞானக் கொரல் - வாக்கியம் எண்: 06 - குருபிரான் அருளமுதம்:**
ஐவகைப் பொறுப்புடை அளவற்ற கருணை நிறை இறைவனின் இருப்பிடமே மனுவின் சுத்தத் துறை இருதயம். இதனையே சாலை ஆண்டவர்கள் **வாசனை கேள்வி இருகண் வாயெவைக்கும் வல்லமை யளிக்கும் அக்கண்ணே ஈசன்றன் னிருப்பும் ரவிகோடி வீசும் இருதய மலர் விரிந்நெழும்பும்** என ஞானமுறையீடு பாடலில் அருளியுள்ளார்கள். தேகம் தாங்கி குரு வடிவாக வரும் இறைவனுக்கே நரனை மனுவாக்கி தேவனாக்கி தன் போல் ஆக்கும் வல்லபம் உண்டு. அவரருளால் அவரவரிடம் பிரணவப் பொருளாக இருந்து ஆட்சி செய்யும் ஆண்டவனை தரிசிக்கும் போதே வினை தீர்ந்து பிறவாமை வாய்க்கும்.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**
இறைவனை அறியும் அறிவு மனு ஒருவனுக்கே உண்டு. மனம் செம்மையாகும் மார்க்கம் சொல்வதே கோவில்கள். துவைதம் அத்வைதம் விஷிஷ்டாத்வைதம் என்பதின் மூலமே ஞான வழியை ஞானிகள் அருளியுள்ளனர். கன்மம் விளைவிக்கும் ஆணவத்தின் அம்சமான மனம் அறிவின் வசம் திரும்பும் வழிவகை அருள்வதே பூரணப் புதையல்.
நவநிலைகள் கொண்ட நடமாடும் ஜீவாத்மா இல்லறம் தொடங்கி சமத்துவம் வரையிலான 8 நிலைகள் கடந்து கலைகள் 64க்கும் மேம்பட்ட ஓர் கலையில் இரண்டறக் கலப்பதே பூரணத்துவம். பூரணத்தின் ரகசியம் அறியும் சாதனங்களே மனதின் அந்தகரணக் கூட்டங்கள். எண்ணங்கள் ஒடுங்கும் ஏட்டினை அறிவது பூரணமாகவும் அது கடந்து அப்பால் இருப்பதை அறிவதுவே **பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் னிர்ரஹீம்** எனும் பரிபூரணம், என்ற குருபிரானின் அருளமுதுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும், அவை இனிதே நிறைவானது.

## 30-01-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் பணிந்து ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** அணு வடிவான நம்மை நாம் வேத சாட்சியாக உணர்வதே அறிவுத்தெளிவு. மாயக் கூத்தாடும் மனதின் பொய்யை விட்டு மெய்யைப் பெற இறைவன் வரமாக அருளிய நாட்களே ஜீவனின் ரகசியமாக விளங்கும் பௌர்ணமி, அமாவாசை, வளர்பிறை தினங்கள். புறச்சடங்கு மற்றும் விசும்பிலங் குறிகளாகிய சந்திரன், சூரியன், நட்சத்திரம் மூலம் மெய்யை உணர்த்தும் ஞானிகள் அறிவிருக்கும் தலம் அறிவித்து நம் ஆவி வீணாகாமல் காக்கிறார்கள். மெய்யைப் பெற்றும் ஆணவ இடும்பில் ஏறி அறம் மெலிந்தவனின் குறை மனத்துப் பிழை ஒதுக்கும் சகிப்புத் தன்மையே மெய் ஞானத்தின் உச்சமாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**
கங்காளன் பூசும் கவசத் திருநீறே முப்புரி, அறுபுரி நூல், பிரணவப் பொருள், சூட்சக் கயிறு, துப்புரவாக அவரவருள் துலக்கும் ஆசான் என்பதாகும். இது ஒன்றே பரமபதம்



Copyright © AMNA Trust, Chennai 

அடைவதற்கு உரிய வழி என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. உயிரின் ரகசியமாக உடலின் 12 இடங்களில் அணியும் விபூதி நித்தியத்தில் நம்மை ஆக்கும் நடுப்பொருளாம் பஞ்சாட்சரத்தின் நகலேயாகும். மணிவாசகப் பிரான் கூற சிவபெருமான் எழுதியது போல் சிவபெருமானாக வந்த தனிகை மணிப்பிரான் கூற சாலை ஆண்டவர்கள் எழுதியதே **தோடுடையோர் ஏடெழுதென் றேவிடையும் தரவே தேசமக்கள் வாழ்விரெனச் செப்பினோமி தம்ம** என்ற திருப்பாடல். வியாசர் கூற வினாயகர் தன் ஒற்றைக் கொம்பை ஒடித்து எழுதிய இராமாயணக் கதையின் தாத்பரியம் நபுசாக இருந்த மனதை ஒடித்து அகத்தில் அறிவாக எழுதிய அறிவை அறிந்தவரின் நிலை என்பதே.

**பூரணப்புதையல் - குருபிரான் அருளமுதம்:**

நாதன் வழங்கும் நாத மருந்தை உட்கொள்ளும் தேவ யோனியே சுருதியாகும். நால்வேதம் கூறும் மகா வாக்கியங்களே வேத அந்தமாகிய உபனிஷத். ஈமானை அறிந்தவர்கள் இருக்கும் நாட்டின் சிறப்பை ஏழு பாடல்களாகவும், இதுவரை உலகம் அறியா ரகசியத்தை ஏறு துறை மறை உலகப் பாடலாகவும் சாலை ஆண்டவர்கள் பூரணப் புதையலில் அருளியுள்ளார்கள். ஓரறிவாய் விளங்கும் அறிவினை அறிந்த குரு கொண்டலின் வாய்மை ஒன்றே இவற்றை நாம் அறிந்து உணர ஏதுவாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*சந்நேகங்ஙள் எல்லாவற்றையும் அடியோடு னிவிருத்தி செய்வதில் வல்லவரும், ஜனனமரண பயத்தை அடியோடு விலக்குகிறவருமாக விளங்ஙுகிறவர் எவரோ, அவரே பரமகுருவாக எண்ணப் பெறுகின்றார்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**05-01-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **அந்நமே சிந்நை பதிந்ந சந்நன கந்நங்ஙமமும்...** என்ற விருத்தம் கேதாரகௌளை ராகத்தில் பாடப்பெற்று அவை இனிதே மலர்ந்தது. தொடர்ந்து வெவ்வேறு விருத்தமும், பாடலும் அங்கத்தினர்கள் அதே ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்ற பின் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**12-01-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. பிறகு அனைவருக்கும் **பானைபலிப் பாடல்** கற்று கொடுக்கப் பெற்ற பின் அனைவரும் பாடி அவரவரின் தனித் திறமையை வெளிப்படுத்திய உடன் அவை இனிதே நிறைவானது.

**19-01-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **ஆறைந்நும் ஒருவ ருக்காய் அருளிய அதனைத் தானே...** என்ற விருத்தப் பாடலும் **வஞ்ஞமில் பரமார்த்த தவத்தினர்...** என்ற பாடலும் நாதநாமக்ரியா ராகத்தில் பாடப் பெற்று அவை மலர்ந்தது. தொடர்ந்து அதே போல் விருத்தம் மற்றும் ராகத்தில் பல பாடல்களும் ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் நூலில் இருந்து அங்கத்தினர்கள் பாடியதும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*அனேக ஜன்மங்ஙளிற் செய்த புண்ணியத்தினால் இவ்விதமான மகாகுரு கிடைக்கிறார் – இக் குருவை அடைந்ந சீடன் மறுபடியும் ஜனன மரணத்தை அடைகிறதில்லை. எவர், மோகம் முதலியவை அற்றவரோ, சாந்நிசொரூபரோ, பரம திருப்தியை அடைந்நவரோ, பிரம்ம விஷ்ணுக்களின் செல்வத்தையும் துச்சமாக னினைக்கிறவரோ அவரே பரமகுரு ஆவார்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஜனவரி 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

**14-01-2025 ~ செவ்வாய்க்கிழமை**

குருபிரான் **திரு.சாலை இரவி அப்பா** அவர்கள் திருமுன்பாக **பொங்கல் திருநாள் திருவிழா** சிவகாசியில் சிறப்பாக நடைபெற்றது.





## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **02-03-2025 / சென்னை ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருமுன்பாக, மெய்வழி குழந்தைசாமி ஐயா அவர்களின் ஆண்டு பூர்த்தி விழா சென்னையில் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 ஜனவரி மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 90**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 43 – Month: February 2025*